பக்கங்கள்–08

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி -09 | 26-08-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 189







# குரங்குபாஞ்சானை நடுநிலைமையாளரிடம் விடுமாறு கோருகிறது கண்காணிப்புக்குழு!

## ரெலவ்சன் புலிகளிடம் முன்வைத்த புதிய திட்டம்

(திருகோணமலை)

**திருகோணமலை குரங்கு பாஞ்சானிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம் தொடர்பாக கண்காணிப்புக்குழு புதிய யோசனையொன்றை முன்வைத்துள்ளது. இம்முகாம்பகுதியை நடுநிலையாளர்களின் பயன்பாட்டுக்கு வழங்குமாறு கண்காணிப்புக்குழு கோரியுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. நேற்று திருகோணமலைக்குச் சென்று விடுதலைப்புலிகளைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சந்தித்த போதே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.**

நேற்றைய சந்திப்பின் போது மூதூரில் நடைபெறும்வன்முறைகள் தொடர்பாகவும் குரங்கு பாஞ்சான் முகாம் தொடர்பாகவும் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன்போது மூதூரில் நடைபெறும் வன்முறைகளுக்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்ததோடு இவ்வன்முறைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்று வருவதையும் சுட்டிக்காட்டினர்.

நேற்றைய சந்திப்புக் குறித்துக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவிக்கையில்,குரங்குபாஞ்சானில் விடுதலைப் புலிகளின் முகாமை அகற்றுவது பற்றி இதில் பேசப்பட்டது. இது குறித்து புதிய யோசனை ஒன்றை கண்காணிப்புக்குழு முன்வைத்தது. அந்தயோசனையை வெளியிட நாம் விரும்பவில்லை. இந்த யோசனையை தலைமையுடன் ஆலோசித்து விரைவில் ஒரு முடிவிற்கு வருவோம் என்று எம்மிடம் விடுதலைப் புலிகளின் தளபதி கேணல் பதுமன் கூறியுள்ளார். அந்த முடிவு வந்தவுடன் அது குறித்து மேலும் கலந்துபேச கண்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளரை சூல்கெய்ம் இன்று சந்திப்பார்

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்கெய்ம் இன்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு தொடர்பாக பாரிஸில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் அரசியல்துறைப் பொறுப்பாளரை அங்கு எரிக் சூல்கெய்மும் சிறிலங்காவிற்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்காரும் சந்திக்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## திருமலையில் நேற்று பூரண கதவடைப்பு நாளாந்த நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று பூரண கதவடைப்புப் போராட்டம் இடம் பெற்றுள்ளது.திருமலை வாழ் பொங்கு தமிழ் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கதவடைப்புப் போராட்டம் அமைதியான முறையில் வெற்றிகரமாக அமைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.தமிழீழ விடுதலைப் புலி களே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனவும், அவர்கள் கூறும் இடைக்கால நிர்வாகசபையே சமாதானப் பேச்சுத் தொடர ஒரேவழி எனவும வலியுறுத்தி இந்தப் போராட்டம்

(08 ஆம் பக்கம் பார்க்க)



வெறிச்சோடியுள்ள திருமலை நகர வீதி

## தமிழர் தலைநிமிர்ந்து நிற்க அர்ப்பணிப்புக்களே காரணம்

### தியாகி திலீபனின் நினைவுத்தூபி திறப்பு நிகழ்வில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்கு தமிழீழ விடுதலைப் போராட்டமும், அர்ப்பணிப்புக்களுமே காரணம் என யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் புதிதாக அமைக்கப்பட்ட தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின் நினைவுத் தூபி திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இளம்பரிதி அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளார்.முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெற்ற தியாகி லெப்.கேணல் திலீபனின் புனர்நிர்மானம் செய்யப்பட்ட நினைவுத்தூபி திறப்பு விழாவில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போன முஸ்.இளைஞர் தொடர்பாக பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன!

### முஸ். பிரதிநிதிகளிடம் தளபதி ரமேஸ் தெரிவிப்பு

சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் வாலிபர்கள் இருவர் மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் காணாமல்போனதாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பாக, பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளதாக புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஷ் தெரிவித்துள்ளார். பொலிசாரும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவினரும் வெவ்வேறாக மேற்கொண்டு வரும் விசாரணைகளின் போதே இந்தத் தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு கரடியனாறுப் பிரதேசத் திலுள்ள தேனகம் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விசேட சந்திப்பொன்றின்போதே அவர் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)



அலிசாகீர் மௌலானாவை புலிகளின் தளபதிகள் அழைத்து வருகின்றனர்

### அம்பாறை மாவட்டத்தில் காணாமற்போன

## இரு முஸ்லிம் இளைஞர்கள் தொடர்பாக இரு முஸ்லிம்கள் பொலிசாரால் கைது!

(லண்டன்)

அம்பாறை மாவட்டத்தில் இரு முஸ்லிம்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் காணாமற் போனது தொடர்பாக விசேட பொலிஸ் குழுவினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காணாமற்போன இருவருடனும் இறுதியாக கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்களின் விபரங்களை கையடக்கத் தொலைபேசி நிறுவனத்திற்குச் சென்று விசாரித்த பொலிசார் அதன் அடிப்படையிலேயே இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். ஓட்டமாவடியைச் சேர்ந்தவர்களான

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான ஜே.வி.பி.யின் பாதயாத்திரை ஆரம்பம்!

இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்கக்கூடாது என்று ஜே.வி.பி. நேற்று காலியில் ஆர்ப்பாட்டப் பாதயாத்திரை ஒன்றை ஆரம்பித்துள்ளது.இது பல கிராமங்களூடாகச் சென்று வரும் வியாழக்கிழமையன்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தைச் சென்றடைந்து அங்கு பொதுக் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி.கிராமம் கிராமமாகச் சென்று சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும், நோர்வே அரசாங்கத்திற்கு எதிராகவும் ஆயிரம் கூட்டங்களை நடத்தும் பிரச்சார நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இதன்போது தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது குறித்தும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும்

(08 ஆம் பக்கம் பார்க்க)



பாதயாத்திரையில் கலந்துகொண்ட ஜே.வி.பி. தலைவர்கள்

## நல்லூர் வீதித் தடையைத் தாண்ட அடாவடியில் இறங்கிய பொலிசார்!

### தொண்டர்கள் சிலர் காயம்

நல்லூர்க் கந்தனின் உற்சவகால வீதித் தடையை உடைத்துக் கொண்டு சிறிலங்கா பொலிஸ் வாகனமொன்று உட்செல்ல முற்பட்டவேளை அப்பகுதியில் நின்ற விழாக்காலத் தொண்டர்களுக்கும், சிறிலங்காப் பொலிசாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று மாலை ஐந்து மணியளவில் இவ்வீதித் தடையைத் தாண்டி உட்செல்ல முற்பட்ட பொலிஸ் வாகனமொன்றை அங்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கேள்விப் பத்திரங்கள் கோரல்

TURN KEY அடிப்படையில் 20 மெற்றிக்தொன் அளவு கொண்ட உறைநீர் (ஐஸ்) பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திரங்களைப் பொருத்துவதற்கான கட்டடத்தை வடிவமைத்து நிர்மாணித்தலும், இயந்திரங்களைப் பொருத்திக் குறிப்பிட்ட காலத்திற்கு இயக்கி கையளித்தலும் (வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் இயக்குதலும் பராமரித்தலும்).

## ஒப்பந்தங்களின் பெயர்களும் குறியீட்டு இலக்கங்களும்:

I யாழ்ப்பாண மாவட்டம்- மருதங்கேணியில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறைநீர்ப் பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க உறைநீர் உற்பத்தி இயந்திர சாதனத்தைப் பேணுவதற்கான கட்டடத்தை வடிவமைத்தலும், நிர்மாணித்தல், இயந்திரசாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும், பராமரித்தலும்,
ஒப்பந்த இலக்கம்: NEP/MRR/B/J 01.

II முல்லைத்தீவு மாவட்டம்- முல்லைத்தீவில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறைநீர்ப்பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திர சாதனத்தைப் பேணுவதற்கான கட்டடத்தை வடிவமைத்தல், நிர்மாணித்தல், இயந்திர சாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும் பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP/MRR/B/MN01.

III அம்பாறை மாவட்டம்- திருக்கோவிலில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறைநீர்ப் பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திர சாதனத்தைப் பேணுவதற்காக கட்டடத்தை வடிவமைத்தல், நிர்மாணித்தல், இயந்திரசாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும், பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP/MRR/B/A01.

IV அம்பாறை மாவட்டம் -சாய்ந்தமருதுவில் தினமும் 20 மெற்றிக்தொன் நிறைகொண்ட உறை நீர்ப்பாளங்களை உற்பத்தி செய்யத்தக்க இயந்திரசாதனத் தொகுதியைப் பொருத்துதல் மற்றும் இயக்குதலும், பராமரித்தலும்.
ஒப்பந்த இலக்கம்: NEP/MRR/B/A02.

01. ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச்சபை (GATB) வடக்கு- கிழக்கு மாகாணசபையின் சார்பில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேலையை நிறைவேற்ற, தகுதியான கேள்வியாளர்களிடமிருந்து மூடி அரக்கிடப்பட்ட கேள்விப் பத்திரங்களைக் கோருகிறது.

கேள்வியாளரொருவர் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளையோ சமர்ப்பிக்கலாம். இருந்தபோதும், கேள்வி ஆவணங்களில் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பிரமாணப்படி குறிப்பிட்ட தனியொரு கேள்விதாரருக்கு இரு ஒப்பந்தங்கள் மட்டுமே வழங்கப்படும்.

⊙ ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் கேள்வியாளரொருவர் அதற்காக ஒவ்வொரு வேலைத்திட்டங்களுக்கான தனித்தனியான கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

02. *கேள்விகள் மாகாணப் பணிப்பாளர் காரியாலயம், கட்டடங்கள் திணைக்களம், உட்துறைமுகவீதி ,திருகோணமலை* அவர்களிடமிருந்து கேள்வி ஆவணங்களை 2003 ஓகஸ்ட் 23 ஆம் திகதி முதல் 2003 செப்ரெம்பர் 09 ஆம் திகதி பிற்பகல் 03 மணிவரை கேள்வியொன்றுக்கு மீளளிக்கப்படாத (ரூபா 5000/-) ஐயாயிரத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

03. கேள்விதாரர்கள் கீழ்க்காணும் தகுதிப் பிரமாணங்களைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அ. கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிப் பிரமாணங்களைக் கொண்டிருப்பதுடன், ஒப்பந்தக்காரர்கள் ICTAD யில் M4 அல்லது EM2 ஆகிய பிரிவுகளின் கீழ் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டவராயிருத்தல் வேண்டும்.

ஆ. கேள்வியாளரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைத்திட்டங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்குமிடத்து ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கேள்வி ஆவணத்தில் கேட்டுக்கொண்டபடி ஒப்பந்தம் இணைக்கப்படல் வேண்டும்.

இ. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் தகுதிகாண் கேள்விதாரரொருவர், கேள்வித் தொகையின் இருமடங்கு பெறுமதியான ரொக்கம் உள்ளதாக நிரூபிப்பதுடன் / அல்லது கேள்வியின் பிரிவு 4:3(7) இற்கமைய கடன் வசதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி கொண்டிருப்பதாக நிரூபிப்பின், அவருக்கு இரு ஒப்பந்தங்களை வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம்.

04. தகுதிகாண் கேள்விதாரர் ஒருவர் இக்கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களையும், கேள்விப்பத்திர ஆவணங்களையும் பணிப்பாளர் காரியாலயம், கட்டடத் திணைக்களம், வ/கி மாகாணசபை, திருகோணமலை என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

05. திருகோணமலை, வடக்கு -கிழக்கு மாகாணசபையின் கட்டடத் திணைக்களத்தில் கட்டணம் செலுத்தாது இக்கேள்விப்பத்திர விபரங்களைப் பார்வையிடமுடியும்.

06. இக்கேள்விகள் 2003-12-29 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

07. ஒவ்வொரு கேள்வியுடனும் கேள்விப் பிணைப்பணமாக (ரூபா 200,000 /-)இரண்டு லட்சம் ரூபா செலுத்தப்படல் வேண்டும்.

08. அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பிரதம செயலாளர், வ/கி மாகாண பிரதம செயலாளர் காரியாலயம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற விலாசத்தில் சேர்ப்பிக்கப்படலாம்.

09. வடிவமைப்பு ,நிர்மாணம்,பொருத்துதல் பணி மற்றும் ஒப்படைப்பு என்பவற்றுக்கு(09) ஒன்பது மாதமும் இதன் பின்னர் இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு (03) மூன்று வருட கால அவகாசமும் வழங்கப்படும்.

10. 2003-09-29 ஆம் திகதி பிற்பகல் 3.00மணியுடன் கேள்விகள் ஏற்பது நிறுத்தப்பட்டுத் தொடர்ந்து உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

11. கேள்விதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் சமுகம் தருமாறு கோரப்படுகின்றனர்.

தலைவர்,
ஆளுநர் நியமன கேள்விச் சபை,
பிரதம செயலாளர் காரியாலயம்,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,திருகோணமலை.

(சி-8261)

# ஊனமுற்றோருக்கான விளையாட்டு 28 – ஆம் திகதி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர் ஊனமுற்றோருக்கான மாபெரும் விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 28 ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

கிளி/ கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளிலுள்ள ஊனமுற்றோர் சங்க அங்கத்தவர்கள் மேற்படி விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், 28,29ஆம் திகதிகளில் வீதி விளையாட்டு நிகழ்வுகளும் 30ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கிளி/மத்தியகல்லூரி மைதானத்திலும் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகி உள்ளது.இந்நிகழ்வில் அனைத்து மக்களையும் கலந்துகொண்டு மாற்று வலுவுள்ள அங்கத்தவர்களுக்கு உற்சாகத்தையும், ஒத்துழைப் பினையும் நல்கிடும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.(சோ)

# சர்வதேச சிறுவர் தின விளையாட்டு கிளிநொச்சியில் நடத்த ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சர்வதேச சிறுவர் தின விளையாட்டுப் போட்டி கிளிநொச்சியில் நடாத்தப்படவுள்ளது தெரிய வந்துள்ளது.கிளி/முல்லை/ வவுனியா ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கிடையிலான சர்வதேச சிறுவர் தின விளையாட்டுப்போட்டி எதிர் வரும் 31ஆம் திகதியன்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற ஏற்பாடாகியுள்ள தெனவும்,அன்றைய இந்நிகழ்வில் வட-கிழக்கு மாகாண சமூக சேவை சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் திருமதி என்.ஆர். ரஞ்சினி, முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.(சோ)

# காணி உரிமப் பத்திரங்கள் வியாழனன்று வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளி. வட்டக்கச்சி, இராமநாதபுரம் கிராம மக்களுக்கான காணி உரிமப் பத்திரங்கள் எதிர்வரும் 28ஆம் திகதியன்று கரைச்சிப் பிரதேச செயலக இராமநாதபுரம் உப பணிமனையில் வைத்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றைய தினம் காணி உரிமையாளர்கள், தேசிய அடையாள அட்டை, காணி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றுடன் சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சி பிரதேச காணி உத்தியோகத்தர் செ. சிறீரங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பகல் இரவு வகுப்புகள்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நான்கு கிராமங்களில் 445இற்கும் அதிகமான மாணவர்களுக்கு வட்டக்கச்சிப்பிரதேச ஊரக எழுச்சிப் பேரவையின் ஒழுங்குபடுத்தலில இரவு பகல் கற்கை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி கற்கை வகுப்புக்கள் ஆண்டு 01 முதல் ஆண்டு-11 வரையான மாணவர்களுக்கு நடைபெற்று வருகின்றன. இரவு நேர வகுப்புக்களுக்கு சூரியசக்தி மூலம் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இதனடிப்படையில் சம்புக்குளப் பகுதியில் 115 மாணவர்களும் 10 வீட்டுத்திட்டத்தில் 52 மாணவர்களும் மாயவனூர்ப்பகுதியில் 132 மாணவர்களும், பன்னங்கண்டிப் பகுதியில் 152 மாணவர்களும் பாடங்களைக் கற்று வருகின்றனர். இந்த வகுப்புக்கள் அனைத்துக்குமான ஒழுங்கு படுத்தல்கள் யாவும், வட்டக்கச்சிப் பிரதேச ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம் அமைத்தலுக்கான கேள்விகள் கிளிநொச்சி மாவட்ட செலயக கேள்விச் சபையினால் கோரப்படுகின்றது. இது சம்பந்தமான விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் – 2003 – 09 – 04 முற்பகல் 9.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
கேள்விப் பத்திர முடிவு நாள் – 2003 – 09 – 05 காலை 10.00 மணி வரை.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபரும்,
கேள்விச் சபைத் தலைவரும்.

(சி 8473)

# கண்ணீர் அஞ்சலி

22 – 08 – 2003 அன்று அகாலச்சாவடைந்த அக்கராயன் அந்தோனியார் கோவிலடியைச் சேர்ந்த

## கந்தையா சூரியகுமார்

(வெற்றிமனை மகளிர் உளவளத்துணை நிலைய வாகனச் சாரதி)

மனமாத தொலைத்தவர்களின் மனதிலேயே
குடியேறிய அன்புத் தந்தையே
உம் கடமை தொடரும் வேளை
காவலன் பார்வையிலேயே கவர்ந்திட்டவனே
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறாத்துயரில் இருக்கும் இவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கின்றோம்.

இயக்குநர், பயனாளிகள், பணியாளர்கள்,
வெற்றிமனை நிர்வாகத்தினர்.

(3666)

# ஈராக்கை சீரமைக்கச் சென்றவர்கள் மீதான வன்முறைகளுக்கு ஐ.நா.பலத்த கண்டனம்!

## -வெளிநாட்டுப் பயங்கரவாதம் குறித்தும் கவலை

**ஈராக்கை சீரமைப்பதற்கு அந்நாட்டிற்குச் சென்றுள்ளவர்கள் மீது காரணமில்லாது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதனைப் பொறுத்துக்கொள்ள முடியாது என ஐக்கியநாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.சபை தலைமையகம் இது தொடர்பாக செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில் பாகதாத்திலுள்ள ஐ.நா. அலுவலகம் மீதான தாக்குதலைக் கண்டிககும் அதேவேளை இதையிட்டு அதிர்ச்சியும் துயரமும் கொள்வதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஈராக்கில் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. ஈராக்கிய நிர்வாகத்திற்குப் பொறுப்பான அமெரிக்க அதிகாரி போல் பிறேமர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் ஈராக்கினுள் நுழைந்துள்ளார்கள். இதன் காரணமாகப் பயங்கரவாதப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது என்றும் இந்த அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, பாக்தாத்தில் ஐ.நா.தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலியான ஐ.நா.வின் ஈராக்கிற்கான பிரதிநிதி சேர்க்கியோ விஜெராட மெல்லிற்கான அஞ்சலி நிகழ்விலும் அவர் மேற்கண்டவாறான கருத்தினையே வலியுறுத்தியுள்ளார்.

இதில் உரையாற்றிய அவர் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுமாறு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். அல்-ஹைதா இயக்கத்துடன் தொடர்புடைய அம்சாரால் இஸ்லாம் தீவிரவாதிகள் சிரியா, சூடான், ஜேர்மன் ஆகிய பகுதிகளிலிருந்து ஈராக்கிற்குள் நுழைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

## 30,000 சாரதிகள் வேலை நிறுத்தம்

தென்கொரியாவில் 30,000 றக் வண்டிச் சாரதிகள் நேற்று ஐந்தாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அதிகரித்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்றே இவ்வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டுள்ளனர்.

# படகில் குண்டு வெடிப்பு; அறுவர் பலி; 28 பேர் காயம்!

(பொகோடா)

கொலம்பியாவில் இடம்பெற்ற படகு குண்டுவெடிப்பில் ஆறு பேர் உயிரிழந்ததுடன் இருபத்தி எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

கொலம்பியாவின் தலைநகரில் இருந்து 200 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள போட்டோறிக்கோ என்ற பிரதேசத்திலேயே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. 56 பயணிகளுடன் சென்ற இந்தப் படகில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பிற்குக் கொலம்பிய நாட்டுத் தீவிர வாதிகளே காரணமென்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.



பஸ்ராவில் பிரிட்டிஸ் படையினர் மீது கடந்த சனியன்று நடத்தப்பட்ட தாக்குதலில் மிக மோசமாக சேதமடைந்த வாகனம். இத்தாக்குதலில் 3 படையினர் பலியாகினர்.

# சமாதான முன்னெடுப்புக்கள் உதாசீனம்; லைபீரிய அரச வானொலி குற்றச்சாட்டு!

லைபீரியாவில் இடம்பெற்று வரும் சமாதான முன்னெடுப்புக்களைக் கிளர்ச்சியாளர்கள் உதாசீனம் செய்து வருவதாக அரசு குற்றம் சாட்டியுள்ளது.

லைபீரிய அரச வானொலியை மேற்கோள் காட்டி 'ரொய்ட்டர்' இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. மேலும் லைபீரிய கிளர்ச்சியாளர் ஆயிரம் பொதுமக்களைக் கொலை செய்துள்ள' தாகவும் லைபீரிய தேசிய வானொலி தெரிவித்துள்ளது.

வடகிழக்குப் பகுதியில் நன்பியா நகரிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் இச்சம்பவம் எப்போது இடம்பெற்றது என்பது குறித்து உறுதியான தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லையெனவும் 'ரொய்ட்டர்' தகவல் வெளியிட்டுள்ளது.

பரவலாக இடம்பெற்ற இந்தப் படுகொலைகள் காரணமாக அப்பகுதியில் உள்ள மக்கள் கிளர்ச்சியாளர் மீது ஆத்திரம் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச வானொலியில் வெளியான செய்தி குறித்துக் கிளர்ச்சியாளர்கள் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லையென ரொய்ட்டர் செய்தி தெரிவிக்கின்றது.

# சியாமதகுருவை இலக்கு வைத்து ஈராக்கில் குண்டுத் தாக்குதல்

## மூவர் பலி; மதகுரு படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கில் நஜாப் நகரில் முன்னணி சியாமதகுரு ஒருவரின் வீட்டிற்கு வெளியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மதகுரு காயமடைந்துள்ளார். அவரது பாதுகாப்பு அதிகாரிகள் மூவர் பலியாகியுள்ளனர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

சமயல்வாயு சிலிண்டரில் இந்தக் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாகவும் காயமடைந்த மதகுருவை இலக்குவைத்தே பொருத்தப்பட்டிருந்ததாகவும் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கான உயர் சேவை என்னும் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த மதகுருக்களுக்கு பாதுகாப்பு வழங்க அமெரிக்கப் படையினர் மறுப்புத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# பொதுச் சந்தைக் கழிவில் மின் உற்பத்தித் திட்டம்

(சென்னை)

சென்னை கோயம்பேடி காய்கறி மொத்த விற்பனைச் சந்தையில் சேரும் காய்கறிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் 5 கோடி ரூபாவிலான மின் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காய்கறிச் சந்தையில் நாளுமம 38 தொன் கழிவுகள் சேருகின்றன. தினமும் 17 இலட்சம் யூனிட் மின்சாரத்தை இந்தப் புதிய திட்டத்தின் மூலம் தயாரிக்க முடியும்.



மேற்குக்கரை ரபா அகதிமுகாமிற்குச் செல்லும் இரகசிய சுரங்கப் பாதையொன்றின் நுழைவாயிலை பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரி ஆராய்கிறார்.

# தேசிய சனநாயக கூட்டணியின் ஒற்றுமை தேர்தல் வரை தொடர்வது சந்தேகமே!

## - தி.மு.க. தலைவர் கூறுகிறார்

(சென்னை)

தேசிய சனநாயக கூட்டணியின் செயல்திட்டத்திலிருந்து மத்தியரசு விலகிச் செல்வதை தி.மு.க. ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்று அக்கட்சித் தலைவர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் பேசிய அவர், பகுவதைதடுப்புச் சட்டத்திற்கு அறிமுக நிலையிலேயே தி. மு.க. எதிர்ப்புத் தெரிவித்தமைக்குக் காரணம் இது தேசிய செயல் திட்டத்தில் இடம்பெறவில்லை என்பது தான் என்று கூறியுள்ளார்.

மக்களவையில் காங்கிரஸ் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக தேசிய சனநாயக கூட்டணிக் கட்சிகள் காட்டிய ஒற் றுமை எதிர்வரும் மக்களவைத் தேர்தல் வரை தொடருமா... என்று இப்போது கூறமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் டெஸ்மா சட்டத்திற்கு எதிரான எதிர்க் கட்சிகளின் அடுத்த கட்டப் போராட்டம் குறித்து அனைத்துக்கட்சி தலைவர்களுடனும் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

# அமைச்சரவையில் மாற்றம் வரலாம்

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவையில் மாறுதல்கள் குறித்துப் பிரதமர் வாஜ்பாய் முக்கிய அமைச்சர்கள், பாரதிய ஜனதா தலைவர்களுடன் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றங்கள், மாநிலங்களவையில் நிரப்பப்படாதுள்ள 08 நியமன உறுப்பினர்கள் பதவிகளுக்கு யார் யாரை நியமிக்கலாம் என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

காங்கிரஸ் தலைவர் மம்தா பனாஜி, பாரதீய ஜனதாவைச் சேர்ந்த தனஞ்செயக்குமார், சௌடாசிங் ஆகியோர் மீண்டும் தேசிய அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அரச ஊழியர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## -மத்திய அரசுக்கு வலியுறுத்து

(புதுடில்லி)

தமிழக அரச ஊழியர் சங்கங்களும் தொழிற்சங்கங்களும் சுதந்திரமாக செயற்பட மீண்டும் உரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

வேலைநிறுத்தம் செய்த அரச ஊழியர்கள் மீது தமிழக அரசின் டெஸ்மா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தமை பற்றி சி.ஐ.ரி.யு. தொழிற்சங்கம் சர்வதேச தொழிலாளர் அமைப்புக்குக் கடிதமெழுதியிருந்தது.

இதனையடுத்து மத்தியரசுக்குச் சர்வதேச தொழிலாளர் அமைப்பு எழுதியுள்ள கடிதத்தில்,

தொழிற்சங்கங்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், தமிழ்நாட்டில் நடைமுறையிலுள்ள டெஸ்மா சட்டத்தைத் திரும்பப் பெற்று, ஊழியர் சங்கங்களும், தொழிற்சங்கங்களும் சுதந்திரமாகச் செயற்பட உரிமை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளது.



இந்திய பங்களாதேஷ் எல்லையருகே தமதுவேலைகளை முடித்துவிட்டு வீடு திரும்பும் கிராம வாசிகள்

# கணினிகளைப் பேசவைக்கும் மென்பொருள்

நாம் இதுவரை பொதுவாக எழுத்துருக்களுடன் தொடர்புடைய மென்பொருட்கள் பற்றியும், படங்களைக் கையாளுதல், வரைபடங்களை வரைதல், கணக்கிடுதல், தரவுகள் கையாளுதல் என்பனவற்றுக்கான மென்பொருட்கள் பற்றியும் பார்த்தோம். இத்துறையில் மென்பொருட்கள் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன.


மைக்கிரோசொவ்ற் அலுவலகம்

மென்பொருட்களின் பயன்பாடு இவற்றுடன்மட்டும் நின்று விடவில்லை. செயற்கை நுண்ணறிவை கணினிக்கு வழங்கும் திசையிலும் அது வேகமாக முன்னேறிவருகிறது. இது தொடர்பான மென்பொருள் தயாரிப்புத்துறையில் பெருமளவான பணம் தற்போது செலவிடப்பட்டுவருகிறது.

அதேவேளை மனிதனின் ஏனைய புலன்கள் செய்யும் வேலைகளையும் மேற்கொள்ளக்கூடிய மென்பொருட்கள் கூட தயாரிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக பேசும் வல்லமையை கணினிகளுக்கு வழங்கும் வகையிலான மென்பொருட் களைத் தயாரிப்பதும் கூட வெற்றியளித்திருக்கிறது.

1. பேச்சை உருவாக்குதல்
2. பேச்சறிதல்
3. எழுத்தறிதல்

ஆகியவற்றை செய்யக்கூடிய மென்பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதாவது இம் மென்பொருட்கள் கணினிகள் பேசவும், நாம் பேசுவதைப் புரிந்துகொள்ளவும், எழுத்துக்களை வாசிக்கவும் வைக்கக்கூடியனவாகும்.

நாம் பேசுவதைப் புரிந்துகொண்டு அதனை எழுத்து வடிவில் தரும் மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இது சற்றுக் கடினமான விடயமாகும். ஏனெனில் ஒவ்வொருவரும் பேசும் விதமும் வெவ்வேறாக இருப்பதனாலாகும். அத்துடன் ஒரே சொல்லை ஒருவர் பலமுறை பாவிக்கும் போது கூட ஒவ்வொரு தடவையும் ஒரே மாதிரியாக உச்சரிப்பதில்லை. இதனால் கணினிகள் எமது பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமமடைகின்றன. எனவே கணினிகளுடன் பேசுவதற்கு விசேட பயிற்சி தேவைப்படுகிறது. எனினும் இத்துறையிலும் இன்று வளர்ச்சி நிலையிலுள்ள மென்பொருட்கள் உள்ளன.

இதேவேளை கணினிகளைப் பேசவைக்கும் மென்பொருள் துறை மிக வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வாறான பேசும் மென்பொருட்கள் மலிவானவையாகவும் உள்ளன. இங்கே கணினிகளைப் பேசவைக்கும் மென்பொருட்கள் நாம் கணினிக்கு விசைப்பலகை மூலம் வழங்கும் சொற்களைப் பேச்சுவடிவில் தருகின்றன.

இவ்வாறான பலமென்பொருட்களை மைக்கிரோசொவ்ற் (**Microsoft**) நிறுவனம் தயாரித்துள்ளது. விண்டோஸ் 98 எஸ்.ஏ.பி.(**windows 98 SAP**) அவ்வாறான பேசுதலுக்காகப்பயன்படும் மென்பொருளாகும். **SAP** என்பது **Speech Application Programmer's Interface**) என்பதன் சுருக்கமாகும்.

இது பேசும் விதம் மனிதனுக்கு உரிய உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் இல்லாவிடினும் மகிழ்ச்சி, கவலை, விட்டுவிட்டுப்பேசுதல் சொற்களுக்கு வழங்கப்படும் அழுத்தம் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு சிறப்பாகவே உள்ளது.

இந்த மென்பொருளைக்கொண்டு பலபயன்பாட்டு மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. "பேசும் கடிதம்" (**Talking mail**) என்பது இதனைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட மென்பொருளாகும். இந்த மென்பொருள் நாம் இ-மெயில் ஊடாக அனுப்பும் கடிதத்தை உரியவருக்குக் குரல் வழியாகப் படித்துக்காட்டுகிறது. அதாவது கடிதத்தை வாசிக்கிறது.

இதனைத்தவிர "**Read please** 2000" எனும் மென்பொருள் எந்தவொரு எழுத்தையும் படித்துச் சொற்களாக உச்சரிக்கின்றது. இது புத்தகங்களை வாசித்துச் சொல்ல சிறுவர்களுக்குப் பயிற்சியளிக்க எனப் பல்வேறு வகைகளில் பயன்தரத்தக்கது.

இன்று கணினிகள் மூலம் செய்திகளை, அறிவிப்புக்களை வாசிக்கும் தொலைக்காட்சி சேவைகள் உள்ளன. இவற்றில் எழுதப்பட்ட செய்திகளைக் கணினிகளே வாசிக்கின்றன.

இவ்வாறான மென்பொருட்கள் பேச்சு வழக்கில் எழுதப்பட்ட சொற்களைத் திருத்தமாக வாசிக்கக் கூடியவையல்ல. அதிலும் ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய மொழிகளைத் திருத்தமாக உச்சரிக்கமாட்டா.

இதேவேளை, இன்றைய சில கணினி மென்பொருட்கள் கணினிகளைப் பயன்பாட்டாளருடன் உரையாடலை மேற்கொண்டவாறு வேலை செய்ய உதவுகின்றன. உதாரணமாக "டெனிஸ்" என்ற மென்பொருள் இத்தகையதாகும். நாம் ஒரு வேலையைக் கணினி மூலம் செய்ய முயலும் போது சில விடயங்களை மறந்துவிடக் கூடும் அல்லது தவறான முறையில் தவறான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளக் கூடும். அவற்றைச் சுட்டிக் காட்டித் திருத்தங்களைப் பேச்சு வடிவத்தில் வழங்க இந்த மென்பொருளால் முடியும்.

உதாரணமாக நாம் ஒரு கடிதத்தை எழுத ஆரம்பிக்கும் போது மேலே எழுத வேண்டிய விலாசம், திகதி என்பவற்றைத் தட்டச்சு செய்ய மறந்துவிட்டால் அதனைக் குரல்மூலம் சுட்டிக் காட்டும். அதேபோல் பெரியவர்களுக்குக் கடிதம் எழுதும் போது மரியாதைக் குறைவான சொற்களைத் தவறுதலாக இட்டால் அத்தவறைச் சுட்டிக் காட்டுவதுடன் பதிலாகச் சரியான சொல்லையும் சுட்டிக் காட்டும்.

அதேபோல் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், சரியான குறியீடுகளை இடாமை, சொற்களுக்கிடையே இடைவெளியின்மை, தெளிவற்ற வசனங்கள், மயக்கமான சொற்கள், வசனங்கள் என்பனவற்றை இம் மென்பொருள் குரல் வழியாகச் சுட்டிக் காட்டும்.


கணினி செய்தி வாசிப்பவர்

இவை எல்லாம் அநேகமாக ஆங்கில மொழிக்குரிய மென்பொருட்களாகவே உள்ளன. எனினும் ஏனைய மொழிகளுக்கும் இவை விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் மொழி அறிவும், கணினி அறிவும் உள்ளவர்கள் இணைந்தால் எந்த மொழிக்கும் இவ்வகையான மென்பொருட்களைத் தயாரிக்கலாம்.

**சி.சிவபாலன்**

## கண்டாவளையில் தெங்குப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்புக்கு உறுதியளிக்க வேண்டுகை

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தெங்குப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்ய முன்வருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இப்பகுதி கிராம சேவகர்கள், கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இவ்வாறான கோரிக்கையொன்றை முன்வைத்தனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளி/ மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இப்பிரதேச தென்னை உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் செய்கையாளர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கூட்டாக வேண்டிக் கொண்டனர். இதற்குப் பதிலளித்த தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் பயிற்சி வகுப்பு நடாத்த உள்ளதாக உறுதியளித்தார். (14)

## பொற்பதி றோ.க. பாடசாலையில் மாணவர் கல்விநிலை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பொற்பதி பகுதியில் அமைந்துள்ள றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்விரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

தரம் எட்டுவரை கல்வி புகட்டப்படும் மேற்படி பாடசாலையில் 150 மாணவர்கள் வரை கல்விகற்கின்றனர்.

கலவன் பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலையில் ஆசிரியைகள் எவரும் கல்விகற்பிக்க முன் வருவதில்லை எனவும் ஐந்தாம் ஆண்டிற்கு மேல் மாணவிகள் பாடசாலைக்கு செல்வதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு அப்பகுதியில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினரின் பெண்கள் மீதான கெடுபிடியே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரதேச ஆங்கில வள நிலையத்தை கிளிநொச்சியில் அமைக்க வேண்டும்

### -பா.உ. சிவசக்தி ஆனந்தன் வேண்டுகை

வன்னி மாவட்டத்துக்கான பிரதேச ஆங்கில வள நிலையத்தை (**Regional English support centre**) கிளிநொச்சியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் முப்பதுக்கும் மேற்பட்ட ஆங்கில வள நிலையங்கள் உள்ளன. ஆனால் வவுனியா தெற்குப் பிரதேசத்துக்கு அப்பால் அவ்வாறான ஒரு நிலையம் இது வரை நிறுவப்படாமையால் ஆங்கில அறிவு வளர்ச்சியில் அந்நிலையத்தில் கிடைக்கக்கூடிய பல நன்மைகள் குறிப்பாக ஆங்கிலம் கற்பித்தலும் கற்றலும் வன்னி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கிடையாமையை அறியக்கூடியதாகவுள்ளது. இது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகவே கருத வேண்டியுள்ளது.

(இந்நிலையம் கல்வி,உயர்கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு, தேசியகல்வி நிறுவனம், பிரிட்டிஷ் கவுன்ஸில் என்பவற்றின் அனுசரணையுடன் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் ஒரு நிலையமாக ஆங்கில வள நிலையம் அமைக்கப்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அம்பியுலன்ஸ் வண்டிமீது இனந்தெரியாதோர் கல் வீச்சு

மட்டக்களப்பு, ஓட்டமாவடி மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியுலன்ஸ் வண்டி இனம் தெரியாத கோஷ்டி ஒன்றினால் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

மாஞ்சோலை வைத்தியசாலையிலிருந்து இடம் மாற்றப்பட்ட நோயாளியொருவரை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு திரும்பும் போது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சித்தாண்டிப்பிரதேசத்தை ஊடறுத்துச் சென்ற அம்பியுலன்ஸ் வண்டிமீது கற்கள் வீசப்பட்டன. இதனால் கண்ணாடிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. வாழைச்சேனை பொலிசார் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## யாழ். மாவட்ட வாகன ஓட்டுநர்கள் குறிப்புப் பத்திரத்துடனேயே செல்லவேண்டும்

### - மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்

யாழ். மாவட்டத்தில் வாகனம் ஓட்டும் அனைவரும் குறிப்புப் பத்திரத்துடன் (**Endorsement Sheet**) தான் வாகனம் ஓட்ட வேண்டும்.

இவ்வாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காமினி எஸ்-செனரத் கேட்டுள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வாகனம் ஓட்டும் அனைவரும் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரத்துடன் குறிப்புப் பத்திரமும் கொண்டு செல்ல வேண்டும்.

இவையின்றி வாகனம் ஓட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புனரமைக்கப்பட்ட பாடசாலையில் உயர் பாதுகாப்பு வலயக் குறி

ஏழாலை வடக்கிலுள்ள அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள கட்டடங்களுக்கு இடப்படுவது போன்ற இலக்கங்கள் இடப்பட்டிருப்பதால் இப்பாடசாலை மீண்டும் இயங்குமா என்று இப்பகுதி மக்கள் கவலையடைந்து வருகின்றனர்.

கடந்த 13 வருடங்களாக இயங்காமல் இருந்த இந்தப் பாடசாலை அண்மையில் ஜேர்மனிய தொழில்நுட்ப நிறுவனமான ஜி.ரி.இசட் அமைப்பினால் புனரமைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இப்பாடசாலையை அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த இவ்வேளையில் இப் பாடசாலைக்கட்டடத்திற்கு உயர் பாதுகாப்பு வலயக் குறியிடப்பட்டிருப்பது குறித்து அப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2003

**தமிழீழ மீட்புநிதிக் கடன்திட்டத்தின்கீழ் கடன் செலுத்தியோரில் 1500 பேர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 1500 பேரில் இறுதித் தொகுதியினரின் பெயர் விபரங்கள் வருமாறு. இவ் 1500 பேருக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் நாளிலிருந்து 21 ஆம் நாள்வரை கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளது.**

## யாழ்.மாவட்டம்

### யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

**தொடர்பு எண் முழுப்பெயர்**

யா/யா/1 திரு. அந்தோனிப்பிள்ளை மரியதாஸ்
யா/யா/13 திருமதி. ஈஸ்வரி பத்மநாதன்
யா/யா/57 திருமதி. பெலீசியா சகுந்தலை வின்சென்ற்
யா/யா/65 திருமதி. சரஸ்வதி சிவசுப்பிரமணியம்
யா/யா/126 திரு. நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்
யா/யா/139 திருமதி. புவனேஸ்வரி யோகநாதன்
யா/யா/174 திருமதி. வனஜா கனகரத்தினம்
யா/யா/245 திருமதி. சிவபாக்கியலட்சுமி செல்லத்துரை
யா/யா/268 திரு. நடராசா சுவர்ணராசா
யா/யா/280 திரு. மார்க்கண்டு பொன்னம்பலம்
யா/யா/316 திருமதி. சாந்தகுமாரி அரியரட்ணம்
யா/யா/382 திருமதி. பரமேஸ்வரி உருத்திரா
யா/யா/389 திரு. செல்லையா ஜெகராசசிங்கம்
யா/யா/419 திருமதி. இராசமணி நடராஜா
யா/யா/436 திரு. கந்தவனம் மகேசன்
யா/யா/479 திருமதி. சந்திரா ஜெயபாலன்
யா/யா/546 திருமதி. கண்மணி சங்கரப்பிள்ளை
யா/யா/594 திரு. சுந்தரமூர்த்தி சிவபாலன்
யா/யா/649 திரு. செல்லையா தேவராசன்
யா/யா/701 திரு. சின்னத்தம்பி பொன்னையா
யா/யா/835 திருமதி. பத்மாவதி நடராசா
யா/யா/854 திரு. சுடலைமுத்து ஐயம்பெருமாள்
யா/யா/856 திருமதி. கலாநிதி கிருஷ்ணகுமார்
யா/யா/860 திரு. கந்தையா செல்லையா
யா/யா/888 திருமதி. நவஜோதி அகஸ்ரின்
யா/யா/898 திருமதி. யோகராணி சிவசுப்பிரமணியம்
யா/யா/922 செல்வி. மரியகொறற்றி ஆனந்தசெல்வம்
யா/யா/972 திருமதி. றோசலின் மாணிக்கராசா
யா/யா/1113 திருமதி. புவனேஸ்வரி மகாதேவா
யா/யா/1174 திருமதி. பிரான்சிஸ்கா ஜெயசுரூபி ஜோன்பிள்ளை
யா/யா/1216 திரு. மனுவேல்பிள்ளை வேதநாயகம்
யா/யா/1217 திருமதி. மாகிறட் ஆசீர்வாதம்
யா/யா/1242 திருமதி. பத்மலோசனி சிவசாமி
யா/யா/1263 திரு. லெனாட்டொன் ஸ்ரீவன்
யா/யா/1265 திரு. கியூபேட் பிரான்சிஸ் சேவியர்
யா/யா/1291 திரு. சவிரிமுத்து யோசெப் பெனான்டோ
யா/யா/1347 திரு. பொன்னுச்சாமி சிவபாதசுந்தரம்
யா/யா/1371 திரு. செபஸ்தியாம்பிள்ளை சாமிநாதர்
யா/யா/1451 திருமதி. அருளம்மா இரகுநாதன்
யா/யா/1462 திரு. நாகலிங்கம் முத்துக்குமாரு
யா/யா/1467 திரு. வேலுப்பிள்ளை சோமசுந்தரம்
யா/யா/1523 திருமதி. இராணி வேதநாயகம்
யா/யா/1550 திரு. அந்தோனிப்பிள்ளை ஜேம்ஸ்
யா/யா/1635 திருமதி. வசந்திரா இராஜதுரை
யா/யா/1725 திருமதி. றெஜினா அஞ்சலா றோபேட்
யா/யா/1733 திரு. பசுபதி சோமசுந்தரம்
யா/யா/1773 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்
யா/யா/1789 திரு. அரியரத்தினம் தற்பரநாதன்
யா/யா/1804 திருமதி. புஸ்பதேவி நித்தியானந்தன்
யா/யா/1817 திருமதி. குணநிதி புலேந்திரராஜா
யா/யா/1819 திருமதி. சாந்திறாஜினி இராஜேந்திரம்
யா/யா/1834 திருமதி. புஸ்பராணி கமலசிங்கம்
யா/யா/1836 திருமதி. றாஜீ செல்வறாஜன்
யா/யா/1874 திருமதி. குணமணி கோபாலன்
யா/யா/1878 திரு. பொன்னுத்துரை இரவீந்திரன்
யா/யா/1891 திருமதி. கௌரி பரமராஜா
யா/யா/1967 திருமதி. கமலம் முத்துக்குமாரசாமி
யா/யா/2016 திருமதி. தேவகன்னி அந்தோனிப்பிள்ளை
யா/யா/2036 திருமதி. மேரிறபேக்கா நடராசா
யா/யா/2094 திருமதி. மனோரஞ்சிதம் பத்தினாதர்
யா/யா/2111 திரு. இராசையா தவராசா
யா/யா/2139 திரு. துரைசிங்கம் நல்லைநாதன்
யா/யா/2221 திரு. சூசைப்பிள்ளை கிறிசோஸ்தம்
யா/யா/2439 திரு. யோவான் கிளறன்ஸ்
யா/யா/2441 திரு. மிக்கேல் அஞ்சலோ
யா/யா/2503 திருமதி. அன்ரனற் ஸ்ரனிஸ்லாஸ்
யா/யா/2578 திரு. விஸ்வநாதர் கணேசலிங்கம்
யா/யா/2603 திரு. கதிர்காமு தவராசா
யா/யா/2618 திரு. ஆறுமுகம் சாந்தலிங்கம்
யா/யா/2786 செல்வி. விக்னேஸ்வரி ஐயாத்துரை
யா/யா/2794 திரு. பிரான்சிஸ் யூல்ஸ்கொலின்
யா/யா/2799 திரு. சூசைப்பிள்ளை யேசுதாஸ்
யா/யா/2832 திரு. கந்தையா நாகேந்திரன்
யா/யா/2836 திருமதி. பிலோமினா அந்தோணிப்பிள்ளை
யா/யா/2846 திரு. கிருஸ்ணகுட்டி சந்திரகுமார்
யா/யா/2874 திருமதி. நகுலாராணி இரட்ணகோபால்
யா/யா/3005 திருமதி. சகாயமரியை லோறன்ஸ்
யா/யா/3027 திருமதி. டொமற்றில்டா செல்வெஸ்ரர்
யா/யா/3044 திரு. அண்ணாமலை அருணாசலம்
யா/யா/3060 திரு. அந்தோனிப்பிள்ளை இம்மனுவேல் ஜெயரட்ணம்
யா/யா/3253 திரு. இராசேந்திரம் கொன்சன்ரைன்
யா/யா/3324 திருமதி. செபமாலை அருளானந்தம்
யா/யா/3329 திரு. சிங்கராயர் ஆரோக்கியநாதர்
யா/யா/3377 திரு. செல்லத்துரை சோமசுந்தரம்
யா/யா/3457 திருமதி. சகாயநாயகி செந்தூரியன்
யா/யா/3522 திரு. சந்தியோ அருளப்பு
யா/யா/3525 திருமதி. இம்மாக்குலேற் பிரான்சிஸ்
யா/யா/3609 திரு. செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனிதாஸ்
யா/யா/3615 திருமதி. மரியமெசிடி யூஸ்ரஸ்
யா/யா/3648 திருமதி. சுகிர்தபூசணம் வைத்தியநாதன்
யா/யா/3686 திருமதி. புஸ்பா அ. ஜெயநாயகம்
யா/யா/3703 திரு. கார்த்திகேசு யோகநாதன்
யா/யா/3711 திருமதி. இரத்தினேஸ்வரி பாலசுப்பிரமணியம்
யா/யா/3767 திருமதி. கிறேஸ் சூசைரத்தினம்
யா/யா/3814 திருமதி. இராஜேஸ்வரி ஞானரத்தினம்
யா/யா/3844 திரு. பாலரத்தினம் நல்லலிங்கம்
யா/யா/3851 திரு. செல்லையா அப்புக்குட்டி
யா/யா/3899 திருமதி. பாக்கியலெட்சுமி சுந்தரலிங்கம்
யா/யா/3966 திருமதி. ஞானமணி குமாரகுலசிங்கம்
யா/யா/3979 திரு. சுப்பையா சொறுமுத்து
யா/யா/4004 திருமதி. புவனேஸ்வரி தங்கராசா
யா/யா/4044 திருமதி. செல்வராணி இரட்னவேல்
யா/யா/4056 திரு. பூபாலபிள்ளை சுந்தரலிங்கம்
யா/யா/4095 திருமதி. மரியகொறற்றி யூலியற் அன்ரனி
யா/யா/4103 திருமதி. சிறிகைலாயினி சகாயராஜா
யா/யா/4140 திருமதி. மேரி எட்னா ஜெலின் அன்ரநாயகம்
யா/யா/4204 திரு. அல்பேட் றெஜிஸ்யூட் யூஜின்
யா/யா/4219 திருமதி. அஞ்சலா கொலின்
யா/யா/4238 திருமதி. எலிசபேத்தம்மா இராமன்அன்ரன்
யா/யா/4247 திரு. செல்லப்பா சீவரெத்தினம்
யா/யா/4272 திருமதி. மேரி பிரகாசி அந்தோனிப்பிள்ளை
யா/யா/4294 திரு. அ.யோ.வஸ்ரியன் சேவியர்
யா/யா/4408 திருமதி. பத்மா பாவீஸ்
யா/யா/4443 செல்வி. சாந்தநாயகி சுப்பிரமணியம்
யா/யா/4494 திரு. கந்தையா அருந்தவநாதன்
யா/யா/4498 திருமதி. பொன்னு சபாபதி
யா/யா/4615 திருமதி. சிவகாமசுந்தரி பரமசாமி
யா/யா/4675 திருமதி. இந்திராணி விக்னேஸ்வரமூர்த்தி
யா/யா/4692 திரு. சின்னத்துரை சோமசேகரம்
யா/யா/4746 திரு. சுந்தரமூர்த்தி குகதாஸன்
யா/யா/4747 திரு. றோமான் கஸ்மர் கில்பட்
யா/யா/4752 திரு. சிங்கராசா ஜெயநாதிராசா
யா/யா/4772 திருமதி. லைலா ஆபிரகாம்லிங்கன்
யா/யா/4778 திரு. இராமலிங்கம் சுப்பிரமணியம்
யா/யா/4787 திரு. சதாசிவம் சிவஞானம்
யா/யா/4808 திரு. கைலாசபிள்ளை சங்கரலிங்கம்
யா/யா/4952 திருமதி. இந்திராணி ஜோ. மரியரட்ணம்
யா/யா/4967 திருமதி. றோஸ்மேரி அருளானந்தம்
யா/யா/4991 திருமதி. சந்திராவதி மகிபாலா
யா/யா/6282 திரு. ஞானப்பிரகாசம் டேவிற்

### நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

**தொடர்பு எண் முழுப்பெயர்**

யா/ந/19 திருமதி. லீலாவதி சந்திரசேகரி
யா/ந/339 திருமதி. மனோன்மணி சுந்தரலிங்கம்
யா/ந/483 திரு. இளையதம்பி கந்தையா
யா/ந/496 திருமதி. புவனேஸ்வரி விசயரத்தினம்
யா/ந/558 திரு. பரமசாமிக்குருக்கள் இராஜகோபாலசர்மா
யா/ந/608 திரு. கணபதிப்பிள்ளை செல்வரெத்தினம்
யா/ந/622 திரு. தம்பிஐயா சுப்பிரமணியம்
யா/ந/790 திரு. தம்பிப்பிள்ளை நற்குணராஜா
யா/ந/982 திரு. முத்தையா சுப்பிரமணியம்
யா/ந/988 திரு. அப்பச்சி நற்குணசிங்கம்
யா/ந/997 திரு. நடராஜா நந்தகுமார்
யா/ந/1017 திரு. மாணிக்கம் ரகுநாதன்
யா/ந/1025 திரு. வைத்திலிங்கம் இராமகிருஷ்ணா
யா/ந/1038 திரு. நாகலிங்கம் சின்னத்துரை
யா/ந/1084 திரு. செல்லையா சுந்தரலிங்கம்
யா/ந/1103 திருமதி. மீனலோஜினி திருஞானசம்பந்தன்
யா/ந/1138 திரு. பொன்னையா இளையதம்பி
யா/ந/1183 திரு. அருணாசலம் மகேஸ்வரன்
யா/ந/1284 திரு. இராசையா தர்மரத்தினம்
யா/ந/1357 திரு. தம்பிப்பிள்ளை தம்பிராசா
யா/ந/1377 திரு. காசிப்பிள்ளை மயில்வாகனம்
யா/ந/1379 திரு. முருகையா கலைவாணன்
யா/ந/1610 திரு. அந்தோனிப்பிள்ளை மிக்கேல்ப்பிள்ளை
யா/ந/1625 திரு. செல்லப்பா நாகராசா
யா/ந/1646 திரு. சாமிநாதக்குருக்கள் பரமேஸ்வரக்குருக்கள்
யா/ந/1717 திரு. கபிலாயபிள்ளை செல்வரத்தினம்
யா/ந/1784 திருமதி. சற்குணதேவி மகேந்திரராசா
யா/ந/1803 திருமதி. புவனேஸ்வரி அருமைத்துரை
யா/ந/1812 திருமதி. சற்குணதேவி மகதேவா
யா/ந/1822 திரு. பொன்னையா சிங்கராசா
யா/ந/1914 திரு. செல்வத்துரை லிங்கநாதபிள்ளை
யா/ந/1931 திருமதி. மகேஸ்வரி சிவராஜசிங்கம்
யா/ந/1935 திரு. கந்தையா நடராசா
யா/ந/1989 திரு. இராஜரெட்ணம் இராசகுமார்
யா/ந/2009 திரு. நாகலிங்கம் உருத்திரபசுபதி
யா/ந/2073 திருமதி. தனலட்சுமி இரத்தினகோபால்
யா/ந/2095 திரு. இளையவி தம்பையா
யா/ந/2157 திருமதி. கனகமணி மனுவல்
யா/ந/2207 திரு. சின்னத்துரை மகாதேவா
யா/ந/2208 திருமதி. மனோன்மணி வீரவாகு
யா/ந/2262 திரு. இரத்தினம் பூமிபாலசுந்தரம்
யா/ந/2400 திரு. பொன்னுத்துரை யோகராசா
யா/ந/2504 திருமதி. பிரியதரிசினி தயானந்தன்
யா/ந/2509 திரு. முருகேசு இராசதுரை
யா/ந/2521 திரு. பொன்னுத்துரை சந்திரலிங்கம்
யா/ந/2676 திரு. அப்பாக்குட்டி இராசையா
யா/ந/2677 திருமதி. சறோஜினிதேவி பரமானந்தம்
யா/ந/2728 திருமதி. சுதாமதி தளையசிங்கம்
யா/ந/2778 திருமதி. யோகம்மா கந்தையா
யா/ந/2811 திருமதி. பத்மினி விக்கினேஸ்வரவேல்
யா/ந/2823 திரு. முருகேசு கனகரத்தினம்
யா/ந/2827 திரு. நாகலிங்கம் குணரத்தினம்
யா/ந/2845 திரு. சுப்பையா லோகேஸ்வரன்
யா/ந/2848 திரு. இராசரத்தினம் மகேந்திரா
யா/ந/2864 திருமதி. மோகனராணி நவேந்திரன்
யா/ந/2896 திரு. செல்லையா பாலராமன்
யா/ந/2944 செல்வி. சாந்திநிதி குகநாததாசன்
யா/ந/2955 திருமதி. சின்னம்மா சின்னத்துரை
யா/ந/2969 திருமதி. சரோஜினிதேவி கனகரத்தினம்
யா/ந/3095 திரு. சின்னத்தம்பி கணேசநாதன்
யா/ந/3236 திருமதி. சுசிலா அருமைநாயகம்
யா/ந/3239 திரு. வல்லிபுரம் சதானந்தன்
யா/ந/3255 திருமதி. சாந்தினி சண்முகலிங்கம்
யா/ந/3266 திருமதி. சொர்ணகாந்தி படியலிங்கம்
யா/ந/3301 திரு. தம்பித்துரை செல்வராசா
யா/ந/3336 திருமதி. திரேசம்மா செபஸ்ரியாம்பிள்ளை
யா/ந/3345 திருமதி. தேவமணி அமிர்தலிங்கம்
யா/ந/3384 திருமதி. யோகம்மா சிறீவிக்கினேஸ்வரா
யா/ந/3397 திரு. சிவப்பிரகாசம் ஆனந்தமூர்த்தி
யா/ந/3405 திருமதி. சுவேந்தினி விமலச்சந்திரன்
யா/ந/3410 திரு. செல்லத்துரை நடராசா
யா/ந/3411 திரு. வைத்திலிங்கம் சோதிலிங்கம்
யா/ந/3496 திரு. சீனியர் பாலசிங்கம்
யா/ந/3529 திரு. இராசையா புவனேந்திரராசா
யா/ந/3627 திரு. கதிரேசு செல்லத்துரை
யா/ந/3639 திரு. நடராசா சிவகுமார்
யா/ந/3648 திருமதி. சறோஜினிதேவி சுந்தரலிங்கம்
யா/ந/3659 திருமதி. நவமணி இராசையா
யா/ந/3671 திருமதி. தேவசகுந்தலா வல்லிபுரநாதன்
யா/ந/3699 திருமதி. அமுதபதி கந்தசாமி
யா/ந/3769 செல்வி. ஞானரூபி வல்லிபுரம்
யா/ந/3774 திருமதி. சரஸ்வதி சிவலிங்கம்
யா/ந/3791 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
யா/ந/3806 திரு. கந்தையா சோமசுந்தரம்
யா/ந/3876 திரு. சிவஞானம் விநாயகமூர்த்தி
யா/ந/3884 திரு. மாணிக்கர் சின்னத்தம்பி
யா/ந/3990 திரு. கைலாசம்பிள்ளை இராமநாதன்
யா/ந/4047 திருமதி. கௌரிமனோகரி பவளநாதன்
யா/ந/4057 திரு. கந்தையா ஜெயவீரசிங்கம்
யா/ந/4108 திருமதி. சற்குணேஸ்வரி ரூபசிங்கம்
யா/ந/4112 திரு. தம்பு ஆனந்த நடராசா
யா/ந/4126 திரு. வன்னித்தம்பி சிவசுப்பிரமணியம்
யா/ந/4127 திருமதி. சிவகலை திருவாதுரை
யா/ந/4162 திரு. சுப்பிரமணியம் துரைராசசிங்கம்
யா/ந/4175 திரு. சரவணமுத்து கந்தவேள்
யா/ந/4178 திரு. சின்னத்தம்பி சற்குணராசா
யா/ந/4180 திருமதி. மரகதவல்லி சிவலிங்கம்
யா/ந/4244 திருமதி. ஞானசௌந்தரி சபாரட்ணம்
யா/ந/4335 திரு. நவரத்தினம் செல்வரத்தினம்
யா/ந/4384 திருமதி. இராசம்மா சண்முகநாதன்
யா/ந/4385 செல்வி. காந்திமதி கந்தையா
யா/ந/4421 திருமதி. கௌரியம்மா மாணிக்கம்
யா/ந/4425 திரு. புவனேஸ்வரன் விஜயரட்ணம்
யா/ந/4455 திருமதி. சறோஜா சுப்பையா
யா/ந/4476 திரு. மருதப்பு செல்லையா
யா/ந/4480 திருமதி. இராஜேஸ்வரி விநாயகமூர்த்தி
யா/ந/4519 திருமதி. ஜெயவதி வரதராசா
யா/ந/4527 திரு. மயிலு நாகரத்தினம்
யா/ந/4533 திருமதி. அன்னலட்சுமி சுப்பிரமணியம்
யா/ந/4585 திரு. கந்தையா துரைராசா
யா/ந/4612 திருமதி. புவனேஸ்வரி குணரட்ணம்
யா/ந/4710 திரு. வேலுப்பிள்ளை விமலநாதன்
யா/ந/4736 திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# சிறிலங்காப் படைகளினால் படுகொலையானோர் நினைவுதினம் செப்—5ல் கடைப்பிடிக்க ஏற்பாடு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களை நினைவு கூரும் பொதுவான துக்கதினமாகச் செப்ரெம்பர் 05 ஆம் திகதியை மட்டக்களப்புப் பெருமன்றம் தீர்மானித்துள்ளது.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர்ச் சூழலின் போது அரச படைகள் பொலிசார் மற்றும் ஊர்காவற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட அனைத்துப் பொதுமக்களையும் நினைவு கூரும் வகையில் செப்ரெம்பர் 05 ஆம் திகதி துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு சிறிவிக்கினேஸ்வரா திருச்சங்க சபை மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் பொது அமைப்புக்களின் புனிதமான மக்கள் பெருமன்றக் கூட்டத்தில்இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது 1990 ஆம் ஆண்டுசெப்ரெம்பர் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 600 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமாதமாகும். இதனால் செப்ரெம்பர் மாதத்தை இம்முறை எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதற்குப் பல பொது நிறுவனங்கள் முன்வந்துள்ளன. செப்ரெம்பர் 05 ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமில் தங்கியிருந்த 158 பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன தினத்தையே மக்கள் பெருமன்றம் துக்க தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு இந்து கிறீஸ்தவ ஆலயங்களில் மணியொலிக்கப்பட்டு விசேட மத வழிபாடுகள் ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு வர்த்தக நிலையங்கள் அலுவலகங்கள் வாகனங்கள் மற்றும் பொது மக்கள் இல்லங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுவது என்றும் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 05 ஆம் திகதி காலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் படுகொலைகளை நினைவு கூரும் எழுச்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்து மக்களையும் நினைவு கூரும் முகமாக நினைவுத்தூபி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகளுக்குத் தமிழர் விடுதலைக்கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் யோசப்பரராஜ சிங்கம் தலைமைவகிக்கவுள்ளார். இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் பிரமுகர்கள் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர்கள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனை வரும் கலந்து கொள்ளவுள்ளனர் என மட்டக்களப்புப் பெருமன்றம் தெரிவித்துள்ளது.

# தெல்லிப்பளை வைத்தியசாலை புனரமைப்பு நிதி இராணுவ முட்டுக்கட்டையால் திரும்பும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இதனால் இவ் வைத்தியசாலை புனரமைப்பிற்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் அபாயம் உருவாகியுள்ளது.சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி வைத்தியசாலையை புனரமைக்க விடாது தொடர்ந்து தடுத்து வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவத்தினரின் இந்த செயற்பாட்டால் பொது மக்கள பெரும் விசனமடைந்து காணப்படுகின்றனர்.

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையின் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு திரும்பிச் செல்லக்கூடிய நிலை தோன்றியுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த காலப் போரினால் மிகவும் சேதமடைந்த நிலையில் இயங்கிவரும் இவ்வைத்தியசாலை தற்பொழுது இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ளது. இதனால் இவ்வைத்தியசாலையைப் புனரமைப்புச் செய்ய எந்த ஒரு கட்டட புனரமைப்புக் குழுவும் முன்வராதுள்ளன.

இந்த வைத்தியசாலைக்கென வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களாலும், ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட காசோலைகள் காலாவதியாகும் நிலையில் உள்ளன. என்றும் இதற்கு இராணுவத்தினர் இவ்வைத்தியசாலையைப் புனரமைக்க விடாமையே காரணம் என்றும் இவ்வைத்தியசாலை வட்டாரத்தினர் மிகவும் கவலையடைந்துள்ளனர். (33)

## மீட்பு நிதி...

யா/ந/4806 திரு. ஐயாத்துரை பொன்னையா
யா/ந/4939 திருமதி. கமலேஸ்வரி ஸ்ரீக்குமார்
யா/ந/5011 திரு. சுப்பையா சற்குணம்
யா/ந/5019 திருமதி. இராசலட்சுமி புவனதாசன்
யா/ந/5159 திருமதி. முத்தாபரணம் சுப்பிரமணியம்
யா/ந/5327 திருமதி. பரமேஸ்வரி சோமசுந்தரம்
யா/ந/5351 திரு. கந்தையா அம்பிகாபதி
யா/ந/5399 திரு. பொன்னு இராசையா
யா/ந/5444 திரு. துரைச்சாமி இராசையா
யா/ந/5464 திருமதி. சிவாஜினி செல்வத்துரை
யா/ந/5489 திருமதி. றஞ்சினிதேவி அரசரத்தினம்
யா/ந/5558 திருமதி. பூமணி தம்பிஐயா
யா/ந/5597 திரு. காசிப்பிள்ளை உருத்திராபதி
யா/ந/5602 திருமதி. சர்வேஸ்வரி விசயரத்தினம்
யா/ந/5640 திரு. கந்தையா கனகசபை
யா/ந/5720 திரு. செல்லத்துரை சிவரத்தினம்
யா/ந/5735 திரு. தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி
யா/ந/5833 திருமதி. விஜயலக்சுமி நாகரட்ணம்
யா/ந/5842 திருமதி. விஜயலட்சுமி வரதராஜன்
யா/ந/5859 திரு. தம்பிராஜா தியாகராஜா
யா/ந/5865 திரு. இராசதுரை ஆனந்தராசா
யா/ந/5898 திரு. சிவகொழுந்து சிவதாசன்
யா/ந/5969 திரு. நாகலிங்கம் குணபாலன்
யா/ந/5996 திருமதி. பூரணம் சீனிவாசகம்

முற்றும்

## மலசலகூடங்கள் அமைப்பு

(ஒட்டுசுட்டான்)

கெயர் நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் முதல்கட்டமாக சின்னச்சாளம்பன், ஒட்டுசுட்டான், முத்துஐயன் கட்டு ஆகிய இடங்களிலிருக்கும் மக்களுக்கு பத்து மலசலகூடங்களும் ஐந்து பொதுக் கிணறுகளும் கட்டப்பட்டு வருகின்றன. (05)

# மணல், கல் ஏற்றுவோர் கவனத்தில் கொள்க!

பூநகரிப் பிரதேச எல்லைக்குள் மணல்,கல், கிறவல் ஏற்ற விரும்புவோர் தமது பகுதிக் கிராமசேவகர் ஊடாகப் பிரதேச செயலாளரின் சிபார்சுடன் பிரதேச சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு ஏற்றல் வேண்டும்.

இந்நடைமுறை 1/9/2003 இல் இருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இந்நடைமுறையை மீறுவோர், தண்டமாக 1000 ரூபாவும் வரியாக நாற்பது ரூபாவும், ஏற்றப்பட்ட பொருளும் பறிமுதல் செய்யப்படும் என்பதைப் பூநகரிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் அறிவித் துள்ளதுடன் மணல் மண்ணைக் கௌதாரி முனையிலும் ஆற்று மண்ணைக் குடமுருட்டியிலும், கல்லை முழங்காவிலிலும் ஏற்ற முடியும். ஏனைய இடங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (34)

# அளம்பில் மாவீரர் துயிலுமில்லம் துரிதமாகப் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லம் கடற்புலிகளினால் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது. மாத்தளன் தொடக்கம் நாயாறு வரையான கிராம மக்களின் பங்களிப்புடன் முல்லைமாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளரினால் இத்துயிலுமில்லப் புனரமைப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (20)


**கிளி.கந்தசுவாமி கோவில்**
**மகோற்சவத்தை முன்னிட்டு சைவநெறித்திறன் போட்டி**

யாவரும் பங்குபற்றலாம். கொடுக்கப்படும் வினாக் கொத்தை விடையுடன் பூர்த்திசெய்து 05.09.2003 இற்கு முன்னர் ஆலயத்தில் ஒப்படைக்கவும். வினாக்கொத்து ஒன்று ரூபா 10, பரிசில்கள் 10உம், சான்றிதழ்களும் 09.09.2003 மாலை 6.00 மணிக்கு வழங்கப்படும்.

வினாக்கொத்து பெறும் இடம் – கிளி.கந்தசுவாமி கோவில்

**இலக்கியா புடைவையகம், வட்டக்கச்சி.**

திருநெறிக்கழகம்
கிளி.கந்தசுவாமி கோவில்.

(3663)


# சாவு அறிவித்தல்

## தம்பு சிவவடிவேல்

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவவடிவேல் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சடைச்சி அவர்களின் அன்பு மகனும் சின்னத்தம்பி பாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும், சரோஜாதேவியின் அன்புக் கணவரும், சுகந்தி ஜெகரூபன் (கனடா) ஜெகந்தி சுதர்ஸன் (சுவிஸ்), காந்தரூபன் (கிளிநொச்சி) தமயந்தி காண்டீபன், நிஷாந்தி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசீகரன், காமீம், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காரீஸ், ஜதீன், வேணுஜா, தனுஸ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முகவரி**
**தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

(3664)

தகவல்
**காந்தன் (மகன்)**

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
30
05
1980



**சுஜிதா புவனேஸ்வரன்**

உதிர்வு
26
08
1993

**சுஜிதா என்னும் பேரன்பே!**
**ஆயிரம் பணிகளுக்குள்ளும்**
**உன்னை நாங்கள் மறப்பதில்லை மகளே!**
**எங்கள் இதயங்களில்...**
**நதியாக நீ ஓடிக்கொண்டிருக்கிறாய்!**
**ஏனைய எண்ணங்கள் எல்லாமே மகளே!**
**அந்த நதியில் மூழ்கிவிடும் விடயங்களாக**
**இருக்கும்...**
**அல்லது...**
**அந்த நதியில் விளைந்த மாணிக்கமாக நிலைக்கும்!**
**எண்ணங்களையெல்லாம் இணைக்கும்**
**எண்ணமாக உன் நினைவு!**

**மகளே! விடுதலையை முன்வைத்து**
**நீ செய்த நாட்டியங்கள்..**
**சமாதானத்தின் வாயில்வரை**
**உலகத்தை அழைத்துச் சென்ற**
**வீரத்தின் கட்டியமாக அல்லவா**
**அன்று அமைந்தது!**
**உன் நினைவு நதியில் நனைந்து...**
**நீ காட்டிய பாதையில் நடக்கிறோம்.**
**உன் நினைவு நதியில் நனைந்து...**
**நீ காட்டிய பாதையில் நடப்போம்**
**மகளே!**

**பெற்றோர்.**

**இல 86**
**உருத்திரபுரம் கிழக்கு,**
**உருத்திரபுரம்.**

**LAMBERTUS STR 58,**
**52441 LINNICH,**
**GERMANEY.** (3661)



**சிந்தனைக்கு**

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-08-2003

# சமாதானத்தின் அறுவடை

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி ஒன்றரை வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அரசாங்கம் இதனால் பல நன்மைகளை ஈட்டியுள்ளது. ஒருவகையில் அரசாங்கம் எதிர் பார்த்த நன்மைகள், நலன்கள் என்பனவற்றை அது பெற்றுக் கொண்டு விட்டது, பெற்றுக்கொண்டு வருகின்றது என்றே கூறலாம்.

எடுத்துக்காட்டாக பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியிருந்த சிறிலங்காவின் பொருளாதாரம் அதிலிருந்து மீட்சிபெறத் தொடங்கியுள்ளது. சிறிலங்கா அரசு எதிர்பார்க்கும் சர்வதேச உதவிகள் கிடைக்கத் தொடங்கிவிட்டன. குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதானால் இவ் அரசாங்கம் பதவிக்கு வந்தபோது எதிர்க் கணியமாக இருந்த பொருளாதார வளர்ச்சி வீதம் தற்பொழுது அதிகரித்த வளர்ச்சிப் போக்கைக் காட்டுவதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் வெளிப்படுகின்றன.

இதேவேளை மோதல்கள் தவிர்க்கப்பட்டு வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான போக்குவரத்தும் ஓரளவு சீர்ப்பட்டுள்ளமையினால் இலங்கையின் ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பன குறித்து அரசாங்கத்தரப்பினால் ஓரளவு பேசக்கூடியதாகவுள்ளது. இதனால் நாட்டின் இறைமை பேணப்படுவதாக அரசாங்கம் கூறிக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் பல முக்கியத்துவம் மிக்கதான பயன்களை அரசாங்கம் ஈட்டிக்கொண்டுள்ளபோதிலும் தமிழ் மக்களுக்கு இதனால் எத்தகைய நன்மையும் கிடைக்கப்பெற்றதாக இல்லை. அதிலும் குறிப்பாக இவ் யுத்தநிறுத்தத்தின் அடிப்படை நோக்கமான மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை.

குறிப்பாக யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் - அதாவது இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டதினால் தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேற வாய்ப்பளிக்கப்படவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியேற இராணுவம் தடைவிதித்து வருகின்றது.

இது குறித்து மக்கள் பல தடவை கோரிக்கை விடுத்தபோதும், சாத்விக ரீதியான போராட்டங்களை நடத்தியபோதும், அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை. இதனால் மக்கள் தொடர்ந்தும் அகதிகளாக வாழ வேண்டிய நிலையே தொடர்கின்றது. இது ஒருபுறம் இருக்க, யாழ். குடாநாட்டில் இராணுவம் புதிதாக அமைத்துவரும் முகாம்கள் காரணமாக புதிய நெருக்கடிகளும் உருவாகி வருகின்றது. அதாவது உடன்பாட்டிற்கு எதிர்மறையாக பதற்றம் அதிகரிப்பதாகவுள்ளது.

இதனால், யுத்தநிறுத்த உடன்பாட்டினால் ஒருபுறம் அனுகூலத்தை அனுபவித்து வரும் அரசாங்கம் மறுபுறத்தில் அவ்வுடன்பாட்டு விதிகளை நிறைவேற்றுவதில் அக்கறையீனத்தைக் காட்டிவருவதாகவே கொள்ளவேண்டியுள்ளது. அது மட்டுமல்ல, இவ் உடன்பாட்டைப் பயன்படுத்தி யுத்தத்தினால் தடைப்பட்டுப் போய்விட்ட சிங்களப் பேரினவாதத்தின் அபிலாசைகள் சிலவற்றையும் நிறைவேற்றிக்கொள்ளவும் அது முற்பட்டு நிற்கின்றது.

இந்த வகையில் அமைந்தவையே வடக்கு, கிழக்குப் பகுதியில் மீண்டும் சிங்களக்குடியேற்றங்களுக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகும். குறிப்பாக அரசாங்கம் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள திருமலை, மன்னார், வவுனியா மாவட்டங்களில் இத்தகைய சிங்களக்குடியேற்றங்களில் தீவிர அக்கறைகாட்டி வருகின்றது. எடுத்துக்காட்டாக திருமலையில் திரியாய், ஆண்டான்குளம், கந்தளாய், சின்னத்தொடுவாய் பகுதிகளிலும், மன்னார், வவுனியா, மாவட்டத்தின் எல்லையோரப் பகுதியிலும் இத்தகைய குடியேற்ற நடவடிக்கைகள் முனைப்புப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்மக்கள் சொந்த நிலங்களில் மீளக்குடியேறுவதற்கு உயர் பாதுகாப்பு வலயத்தினைக் காரணம் காட்டி புறம்தள்ளிவரும் அரசாங்கம், எல்லையோரக் கிராமங்களில் உயர்பாதுகாப்பு வலயங்களைப் பின்னகர்த்தி சிங்களவர்களின் புதிய குடியேற்றத் திட்டங்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது. இக் குடியேற்றங்களுக்காக இராணுவத்தின் வளங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ரீதியில் யுத்த நிறுத்த உடன்பாடானது அரசாங்கத் தரப்பினால் ஒருதலைப்பட்சமாக தமது நன்மைக்கு மட்டும் பயன்படுத்தப்படுவது ஆரோக்கியமானதொன்றல்ல. அதிலும் இவ் யுத்தத்திற்கே அடிப்படைக்காரணிகளில் ஒன்றாகிய சிங்களக் குடியேற்றங்கள் அதாவது தமிழர் தாயக ஆக்கிரமிப்பானது சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பதற்கு ஆரோக்கியமானதொன்றாக இருக்கமாட்டாது.

சமாதானம் என்பது இருதரப்பினருக்கும் நன்மைபயப்பதாக இருக்கவேண்டும். சமாதானத்தின் பயனை ஒருதரப்பு அறுவடைசெய்ய அதாவது அரசாங்கத் தரப்பு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள மறுதரப்பு பார்த்துக்கொண்டு நீண்டகாலம் இருக்கவேண்டுமென எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவை மறுதரப்பின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கிவிடக் கூடியவையாகும்.

# அரச வைத்தியசாலை ஊழியர்களின் விடுப்புக்கள் நேற்று முதல் நீக்கம்!

## -சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் சகல வைத்தியசாலைகளிலும் "கடமையாற்றும் ஊழியர்களின் லீவு நேற்றுமுதல், இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் டாக்டர் றெஜி பெரேரா தகவல் தருகையில், வைத்தியசாலைகளை ஒழுங்கான முறையில் இயங்க வைப்பதற்கென இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்தார். சுகாதார சேவைகள் இணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் கோரிக்கைள் பற்றி ஆராய்வதற்கெனக் கூட்டம் ஒன்று நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்ட போதிலும் தொழிற் சங்க அங்கத்தவர்கள் வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவிருப்பது துரதிஷ்ரவசமான சம்பவமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாமென்று சுகாதார ஊழியர்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையில் அரசாங்க தாதிமார் சங்கம் விடுத்துள்ள அறிவித்தலில் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றப் போவதில்லையென்று அறிவித்துள்ளது. சங்கத்தின் தலைவர் சங்கைக்குரிய முறுக்கெட்வே ஆனந்த தேரர் கருத்து வெளியிடுகையில், சுகாதார சேவைகளின் சம்பள சீராக்கல் சம்பந்தமான அறிக்கையினை 28 ஆம் திகதி வெளியிடுவதாகச் சுகாதார அமைச்சு வாக்குறுதியளித் திருப்பதனால் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றுவதில்லையென்று இத் தீர்மானத்தை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

# இலங்கையில் இருதய நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு!

(கொழும்பு)

இலங்கையின் இருதய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் பிரபல இருதய நோய் நிபுணர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சோபாலிக்க மெண்டிஸ் கருத்து வெளியிடுகையில், 1999 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் இருதய நோயாளிகள் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அதே சமயத்தில் 2000 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்துக்குமதிகமானோர் இருதய நோய்க்குச் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று கூறினார்.

மாரடைப்பினால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 1999 ஆம் ஆண்டு 4500 பேர் மாரடைப்புக் காரணமாக இறந்துள்ளனர். அடுத்த வருடத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 7400 ஆக அதிகரித்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இருதய நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமென்று சோபாலிக்க மெண்டிஸ் குறிப்பிட்டார்.

# இடம்பெயர்ந்தோரை மீள்குடியமர்த்தும் நடவடிக்கை மிக மந்தகதியில் நடைபெறுகிறது

## -உலக ஒற்றுமை இயக்கம் கவலை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நாட்டில் உள்ள சகல பிரிவினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமாதானத் தீர்வு ஒன்றை சிறிலங்கா அரசு காணும் என்று தாம் நம்புவதாக உலக ஒற்றுமை இயக்கத்தின் இலங்கைக்குழு தெரிவித்துள்ளது.

ஒற்றமை இயக்கத்தின் இணை ஆலோசகரான சங்கைக்குரிய மகாகல கடவெல பஞ்ஞாசால தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் பணி மிகவும் மந்தகதியில் இடம்பெறுவதாகத் தெரிவித்த தேரர் இந்தப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

# கொழும்பு-காலி வீதியில் கொள்ளையில் ஈடுபட்ட நபர்கள் மீது பொலிசார் திடீர் தாக்குதல்

## -ஒருவர் சம்பவ இடத்தில் பலி!

கொழும்பு-காலி வீதியில் நள்ளிரவில் வாகனங்களை மறித்துக் கொள்ளையிடப்பட்டுள்ளது. கொள்ளையர்கள் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொள்ளையர் ஒருவர் பலியானார்.

கொழும்பு-காலி வீதியில் அறங்கல என்ற இடத்தில் மயானம் ஒன்றுக்கருகாமையில் துப்பாக்கி ஏந்திய கொள்ளையர்கள் ஏழு வாகனங்களைத் தடை போட்டு மறித்து பயணிகளின் பணத்தைக் கொள்ளையிட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 21ம் திகதி அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதனையறிந்த அம்பலாங்கொட பொலிசார் பயணிகளைப் போல வேடமிட்டு வேறொரு வாகனத்தில் பயணம் செய்து சம்பவ இடத்துக்கு வந்துள்ளனர். அவர்களின் வாகனத்தையும் கொள்ளையர் மறித்துப் பணம் பறிக்க முயன்ற போது பொலிசார் தங்களை அடையாளங்காட்டி, துப்பாக்கியைக் காட்டி சரணடையக் கூறிய போது கொள்ளையர் ஒருவர் தன்னிடமுள்ள துப்பாக்கியால் சுட முயற்சித்திருக்கின்றார். பொலிசாரின் துரித செயற்பாட்டின் மூலம் கொள்ளையர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் பலர் தப்பி ஓடிவிட்டனர். பின்னர் தேடுதல் நடத்திய பொலிசார் ஒரு சந்தேக நபரைக் கைது செய்து 9,400 ரூபா பணத்தை மீட்டுள்ளனர்.

# அமெரிக்க பகிரங்க டென்னிசிலிருந்து வில்லியம்ஸ் சகோதரிகள் விலகல்

நேற்று ஆரம்பமாகிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டித் தொடரில் இருந்து வில்லியம்ஸ் சகோதரிகள் விலகினர். அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் செரீனா வில்லியம்ஸைத் தொடர்ந்து வீனஸ் வில்லியம்சும் விலகுவதாக அறிவித்தார்.

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நேற்று ஆரம்பமாகியது. இடது காலில் ஏற்பட்ட காயத்திற்கு சத்திர சிகிச்சை செய்ய இருப்பதால் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் பங்கேற்க முடியாதென ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

இந்நிலையில், இவரது சகோதரியும், சக வீராங்கனையுமான வீனஸ் வில்லியம்ஸ் தற்போது விலகுவதாக அறிவித்துள்ளார். இவர் கடந்த மே மாதம் முதல் தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். வலிக்கு சிகிச்சை மேற்கொள்வதற்காக இந்தத் தொடரில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டதாகக் கடந்த சனிக்கிழமை நிருபர்களிடம் அவர் தெரிவித்தார்.


# லியாண்டர் பயஸ் இன்றி மார்ட்டினா பங்கேற்கார்

அமெரிக்க பகிரங்க டென்னிசின் கலப்பு இரட்டையர் போட்டியிலிருந்து மார்ட்டினா நவரத்திலோவா விலகியுள்ளார். அவரது கலப்பு இரட்டையர் ஜோடியான பிரபல டெனிஸ் வீரர் லியாண்டர் பயஸ் மூளைத் திசுக்களில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக அமெரிக்காவின் அர்லண்டோ நகரில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம்.

இது குறித்து அவர் கருத்துக் கூறுகையில், லியாண்டர் பயசுக்கும் எனக்கும் இடையிலான நட்பு, வெறும் வெற்றிகளை மட்டுமே இலக்காகக் கொண்டதல்ல. அவர் இல்லாமல், இந்த ஆண்டு அமெரிக்க பகிரங்க டெனிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் பங்கேற்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் வென்றது

பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களை வெற்றி பெற்றுள்ளது. கராச்சியில் நடைபெற்ற இப்போட்டியில் பங்களா தேஷ் அணி முதல் இனிங்சில் 288 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில 274ஓட்டங்களையும் பெற்றது. பாகிஸ்தான் அணி முதல் இனிங்சில் 364 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் மூன்று விக்கெட்டை இழந்து 217 ஓட்டங்களைப் பெறறு வெற்றி பெற்றது.



# மும்பாயில் இரு கார்க் குண்டுவெடிப்புகள்

## 65 பேர் பலி; 150க்கும் மேற்பட்டோர் காயம்!

இந்தியாவின் மும்பாய் நகரின் இரண்டு இடங்களில் கார்க் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இக்குண்டு வெடிப்புக்களில் 65 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதோடு 150 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். பல வாக



னங்களும், வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன.

முதலாவது குண்டு கேற்வே ஒப் இந்தியாவிற்கு அருகே வெடித்துள்ளது. இந்தியத் தேசியத்தின் குறியீடாக அமைக்கப்பட்டிருக்கும் அந்தவளைவிற்கருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் டிக்கிக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்துள்ளது. குண்டு வெடித்தவுடன் காரின் துண்டுகள் காற்றில் பறந்து குண்டு வெடித்த இடத்திலிருந்து சுமார் 300 மீற்றரிற்குமப்பால் வீழ்ந்தன. குண்டு வெடித்த இடத்திற்கு அருகில் இருந்தவர்கள் கடலில் தூக்கி வீசப்பட்டனர். கார் நிறுத்தப்பட்டிருந்ததற்கு எதிர்ப்புறத்திலிருந்த தாஜ்மகால் விடுதிக் கண்ணாடிகள் நொறுங்கின.

தற்போது இப்பகுதி பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது குண்டு மும்பாய் நகரின் தெற்குப் பகுதியிலுள்ள இந்துக்கோவிலுக்கு அருகேயுள்ள சவேரி பசாரில் வெடித்துள்ளது. இங்கேயும் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துள்ளது.

அயோத்தியா பற்றி இந்திய தொல் பொருள்துறை நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்திருந்த சில மணி நேரத்தில் இந்தக் குண்டு வெடிப்புக்கள் நடைபெற்றுள்ளன.

அயோத்தியில் இருந்த மசூதி ஏற்கனவே இருந்த இந்துக் கோவில் மீது கட்டப்பட்டிருந்ததாக இந்துக்கள் தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்தை தற்போது தொல்பொருள்துறை வெளியிட்டுள்ள அறிக்கை ஆதரிப்பது போல் இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இக்குண்டு வெடிப்புக்களுக்கு எவரும் உரிமை கோரவில்லை. இக்குண்டுத் தாக்குதல்களைப் பாகிஸ்தான் கண்டித்துள்ளது. இக்கண்டனம் ஒரு புதிய விடயம் என்று இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# கொட்டாஞ்சேனைப் பொலிஸ் பிரிவில் மீண்டும் பொலிஸ் பதிவு நடைமுறை?

(கொழும்பு)

கொழும்பு-கொட்டாஞ்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள பல இடங்களில் கடந்த இரு தினங்களாக பொலிஸ் பதிவு நடைமுறைக்கென விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. கொட்டாஞ்சேனை பொலிசாரும் விழிப்புக் குழுக்களிலுள்ள சிலரும் இணைந்தே அந்தப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் கடைகளுக்கும் இந்த விண்ணப்பப்படிவங்களை விநியோகித்து வருகின்றனர்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளதுடன் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொழும்புப் பிரிவு என்றும் அடிக்குறிப்பு போடப்பட்டுள்ளது. பொலிஸ் பதிவு நடைமுறை கொண்டு வரப்படமாட்டாதென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ள நிலையில் மீண்டும் பொலிஸ் பதிவுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை பொலிஸ் பதிவு நடைமுறைகள் எதனையும் மேற்கொள்ளுமாறு தாமோ, பொலிஸ்மா அதிபரோ எந்தவொரு பொலிஸ் நிலையத்திற்கும் அறிவுறுத்தல் எதனையும் வழங்கவில்லையென சிறிலங்கா உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். அவ்வாறு எந்தவொரு பொலிஸ் நிலையத்திலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டால் அது குறித்து தமக்கு முறையிடலாம் எனவும், அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொட்டாஞ்சேனைப் பகுதியில் விநியோகிக்கப்பட்ட விண்ணப்படிவங்கள், அப்பகுதியில் உள்ள மக்களின் விபரங்களை சேகரிக்கும் முகமாகவே விநியோகிக்கப்பட்டதாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி கே.எம்.ஞானரத்ன தெரிவித்தார். இந்த விண்ணப் படிவங்கள் பொலிஸ் தலைமையகத்தினால் கடந்த காலங்களில் வழங்கப்பட்டதெனவும், இதனைத் தவறுதலாக பொலிஸ் உத்தியோகத்தர்களும், விழிப்புக் குழு உறுப்பினர்களும் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் இரகசியமாக இயங்குவதாகத் தகவல்

முஸ்லிம்களின் தீவிரவாத இயக்கங்கள் சில கிழக்கில் இரகசியமாக இயங்கி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் இந்த அமைப்புக்கள் இரகசிய ஆயுதப் பயிற்சியிலும் ஈடுபட்டிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இந்த இயக்கங்களின் உருவாக்கம் குறித்து கிழக்கிலிருந்து தமது உளவுப் பிரிவுகள் உறுதியான தகவல்களைத் தெரிவித்திருப்பதாக சிறிலங்காவின் புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தக் குழுக்கள் தம்மை முஜாகுதீன், அல்-கைதா, ஒசாமா, ஜிகாத் என்ற பெயர்களில் அழைப்பதாக உள்ளூர் வாசிகள் தெரிவிக்கின்றனர்.

கரையோர நகரான காத்தான்குடி மற்றும் முக்கிய முஸ்லிம் நகர்களை அண்டிய இடங்களில் பல்வேறு ஆயுதங்களை இயக்குவதற்கான பயிற்சிகளில் இந்தக் குழுக்கள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குழுக்கள் கிழக்குப் பிரதேசத்தில் செயற்படுவதை சிறிலங்கா உள்துறை அமைச்சின் செயலாளர் புனேட்டும் உறுதிப்படுத்தியுள்ளார். தற்போதைய பதற்ற சூழ்நிலையில் அவை பற்றிய விபரங்களை வெளியிட முடியாது எனினும் இந்தக் காரணத்தினாலேயே கிழக்கு மாகாண நிலை குறித்து விசாரணைகளை நடாத்துவதற்கு உயர் மட்ட குற்றப்புலனாய்வுப் பொலிஸ் குழுக்கள் இரண்டு தம்மால் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் புனேட் தெரிவித்துள்ளார்.

# இல.க்கு மீண்டும் இந்தியா படைகளை அனுப்பமாட்டாது

## இலங்கைக்கான இந்தியத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கு மீண்டும் படையை அனுப்பும் எண்ணம் தமது அரசிற்கு இல்லையென சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு முன்னர் அமைதிப படையை இந்தியா அனுப்பியதில் ஏற்பட்ட அனுபவத்தையும் தூதுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உள்நாட்டு மோதல்கள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் இந்தியாவில் தீவிரமடைந்திருக்கும் நிலையில் இலங்கைக்கு அமைதிப் படையை மீண்டும் அனுப்புவது இயலாத காரியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் ஜீ.எல். பீரிசின் பிறந்த தினத்தை ஒட்டி அவரது இல்லத்தில இராப் போசன விருந்துபசாரம் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியத்தூதுவர் நிருபம் சென்னுடன், அங்கு வந்திருந்த ஈ.பி.டி.பி.யின் செயலர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோருடன் கருத்துப் பரிமாற்றம் செய்தபோதே தூதுவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டுமென டக்ளஸ் தேவானந்தாவும், சித்தார்த்தனும் கோரியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நல்லூர்...

நின்ற பாரியோவான் தொண்டர்களும், சாரணர்களும் தடுத்து நிறுத்தினர். இதனால், ஆத்திரமடைந்த சிறிலங்கா பொலிசார் வாகனத்தை விட்டு இறங்கி வீதித்தடைக்குப்போடப்பட்ட தடைக் கம்பங்களையும், தகரங்களையும் கல்லால் உடைத்து விழுத்தியுள்ளனர். இதனால் சீருடையில் நின்ற அந்த தொண்டர்கள் காயமடைந்துள்ளனர். இதனால் இப்பகுதியில் சில மணி நேரம் பதற்றம் நிலவியது.

திருவிழாக் காலங்களில் ஆலய வளாகத்துக்குள் எந்தவிதமான வாகனங்களும் உட்செல்லக்கூடாது என்று திருவிழா ஏற்பாட்டுக்காரர்கள் கேட்டுக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் ஏற்கனவே இணங்கிக் கொண்டிருந் தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

### இடைக்கால...

பரப்புரை செய்து வருகின்றது.

அத்துடன் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபையினை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்கு எதிராக சிஹல உறுமய கட்சி வடக்குக்-கிழக்கில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக அந்தக் கட்சியின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையினை வழங்குவதனை அனுமதிக்க முடியாது எனவும் இதனால் வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் கூறி அக்கட்சியும் சமாதான முயற்சிகளைக் குழப்ப முனைவதும் நோக்கத்தக்கது.

### இரு...

சமூர்த்தி உத்தியோகத்தரான முகமட் அலியார் ராபிக் என்பவரும், கால்நடை வியாபாரியான முகைதீன் பாபா உசைன் என்பவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களுடன் காணாமற்போனவர்கள் ரி-56 ரகத் துப்பாக்கியைக் கொள்வனவு செய்யத் தொடர்பு கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காணாமற்போன இருவரும் எங்கிருக்கின்றார்கள் என்ற விபரத்தை விரைவில் வெளியிடக் கூடியதாக இருக்கும் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரும் கல்முனை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு அடுத்த மாதம் எட்டாம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### தமிழர்...

பொது ஈகச்சுடர்களை நல்லூர்க் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், நல்லூர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கனகசபாபதி, முன்னாள் பிரதிக் கல்விப்பணிப் பாளர் ராஜகோபால் மற்றும் தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த கண்ணன், யாழ்மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில், கப்டன் றொசானின் தந்தை இரத்தினசிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசை ஆனந்தன் ஆகியோர் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி அவர்கள் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தியாகி லெப் கேணல் திலீபன் அவர்களின் நினைவுத்தூபியை மாவீரர் தூபவனின் தந்தை மு.செல்லத்துரை திறந்து வைத்தார். தொடர்ந்து நினைவுத் தூபிக்கான மலர் மாலையினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் மற்றும் விநாயகமூர்த்தி ஆகியோர் அணிவித்து வைத்தனர். தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் சிவராசா மலர் மாலை அணிவித்தார். அதன் பின்பு பொதுமக்கள் தியாகி திலீபனின் தூபிக்கு மலர் வணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் சிவாஜிலிங்கம், விநாயகமூர்த்தி, இளம்பரிதி, ஈழவேந்தன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் படம்பிடித்துச் சென்றுள்ளனர். (33)

### காணாமற்...

இது அரசியல் பின்னணியுடன் இடம்பெறும் கடத்தல் நாடகம் எனப் புலப்படுவதாகத் தெரிவித்துள்ள அவர், பொலிஸ் அதிகாரிகளின் தொடர்பாடலுடன் தற்போது இடம்பெற்று வரும் விசாரணைகள் பூர்த்தியடையும் வரையில் முஸ்லிம் மக்கள் மிகவும் பொறுமையுடன்இருக்க வேண்டும்என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சிகள் மற்றும் சகோதர இன உறவுகளைச் சீர்குலைக்கும் சதித்திட்டத்துடன் நடாத்தப்பட்டுள்ள இச்சம்பவம் குறித்து மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட வேண்டுகோளின்பேரில் கொள்கைத் திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சு ஆலோசகர் அலிசாஹிர்மௌலானா தலைமையிலான முஸ்லிம் பிரதிநிதிகள் குழு இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தது. சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது அம்பாறையில் இரு முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமை, இரு இளைஞர்கள் காணாமற்போனமைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாகிர் மௌலானா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் முகமாக சில தீயசக்திகள் திட்டமிட்டுச் செயற்படுகிறது எனவும், தற்போது பொலிஸ் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்ட அவர் இவ்வாறான நடவடிக்கைகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான செயலெனவும் தெரிவித்துள்ளார்.இக்கலந்துரையாடலில் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், தளபதி பிரபா, புனர்வாழ்வு பொறுப்பாளர் துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திரு...

நடைபெற்றது.

அத்துடன் சர்வதேச ஏகாதிபத்தியவாதிகளின் சதிவலையின் பின்னணியில் தமிழ்மக்களைக் கூறுபோட்டு சமாதான முயற்சிகளைக் குழப்ப முயல்தல், சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கில் அரசினால் திட்டமிடப்பட்டுள்ள கிழக்குப் பாதுகாப்பிற்கான ஆட்சேர்ப்பு, தமிழ் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கைப் பிரிக்கின்ற சிறிலங்கா சனாதிபதியின் சதி நடவடிக்கை, சிறிலங்காப் படையினரால் தமிழ்மக்களுக்கெதிராக மீண்டும் கட்டவீழ்த்துவிடப்பட்டுள்ள அட்டூழியங்கள் என்பவற்றைக் கண்டித்து இந்தக் கதவடைப்புப் போராட்டம் இடம்பெற்றது.

### குரங்கு...

காணிப்புக் குழுவின் தலைவர் அங்கேசெல்வர் என கண்காணிப்புக் குழுவின் சார்பில் பேசவல்ல அதிகாரி அக்னஸ் தெரிவித்தார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த முகாமை புலிகள் முடாவிட்டால் இராணுவம் வலுக்கட்டாயமாக அதைச் செய்ய வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் எழுதியுள்ளாரே; அதை நீங்கள் புலிகளிடம் தெரிவித்தீர்களா என அதிகாரி அக்னசிடம் நிருபர் ஒருவர் கேட்டபோது, ஆமாம் தெரிவித்தோம் இந்த சின்னஞ்சிறு முகாம் தொடர்பாக யுத்தநிறுத்தமே கேள்விக்குள்ளாகும் அபாயம் இருப்பதை முக்கிய செய்தியாக நாங்கள் விடுதலைப்புலிகளிடம் தெரிவித்தோம் இதை தளபதி கேணல் பதுமன் நன்கு உணர்ந்து கொண்டதாகவே எங்களுக்குத் தெரிந்தது.

புலிகள் இந்த புதிய யோசனையைப் பின்பற்ற காலக்கெடு ஏதும் விதித்துள்ளீர்களா எனக் கேட்டபோது, காலக்கெடு எதுவும் விதிக்கவில்லை. இன்றைய பேச்சுவார்த்தை பின்படி நாங்கள் புரிந்துகொண்டதன் படி பார்த்தால் அடுத்த ஒருவாரம் அல்லது பத்து நாட்களுக்குள் புலிகள் இந்த விடயத்தில் செயற்படவேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். செயற்படுவார்கள் என்பதும் எங்களுடைய எதிர்பார்ப்பு.

கண்காணிப்புக் குழுவின் சார்பில் முன்வைக்கப்பட்ட புதிய யோசனையானது, புலிகள் இந்த முகாமை விட்டு அகன்று அந்தப் பகுதியை கண்காணிப்புக் குழுவிடம் கையளித்து விட வேண்டும் என்பதுதானா என்று கேட்டபோது, இதைப் பத்திரிகைகளுக்கு வெளியிட வேண்டாம் என்பதே கண்காணிப்புக் குழு மற்றும் விடுதலைப் புலிகள் இரண்டு தரப்பும் நேற்று ஏற்றுக்கொண்ட பொது வான உடன்பாடு. எனவே இது பற்றி உங்களுக்குத் தெரிந்திருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீங்கள் கூறுவதை நான் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ போவதில்லை. ஆனால் இந்தப்பிரச்சினை சுமுகமாகத் தீரவேண்டும். எங்களுடைய இந்த சந்திப்பின் முடிவு பத்திரிகைகளுக்குத் தெரிய வேண்டாம் என்றே பொதுவாக ஏற்றுக் கொண்டோம் என கண்காணிப்புக் குழுவின்அதிகாரி அக்னஸ் மேலும் கூறியுள்ளார்.

இச்சந்திப்பு நேற்று சம்பூரில் இடம் பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் திருமலை கட்டளைத் தளபதி கேணல் பதுமன், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் அதன் தலைவருடன் பிரதித்தலைவர் ஹெறாக்லண்ட், பேச்சாளர் அக்னஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னதாக சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் திருமலை சீனன்குடாதளத்திற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவின் தலைவரும், பிரதித்தலைவரும் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களையும் சந்தித்து அரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பின் போது செய்தியாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் கடற்படையினரின் படகு மூலம் சம்பூரிற்குச் சென்ற கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதேவேளை, வரும் வியாழக்கிழமை மட்டக்களப்பிற்குச் செல்லவுள்ள கண்காணிப்புக்குழுவின் தலைவர் பல சந்திப்புக்களை மேற் கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.